1987 நவம்பர் 12]

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவருடைய முன்னோடித் திட்டமான கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பஞ்சாயத்து ஒன்றிய தலைநகரங்கள், வட்டத் தலைநகரங்கள் இருக்கின்ற பகுதியில் கிராமத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அரசு பணியாளர்கள் நிரம்ப இருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி தேவை என்ற காரணத்தால் அதை மனதிலே கொண்டு ஆங்காங்குள்ள ஒன்றிய, வட்டாரத் தலைநகர் பகுதியில், பேரூராட்சிப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புதிய திட்டங்கள் தீட்டி வீடுகளை கட்டித் தர அரசு முன்வருமா ? அதைப் பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசு ஆணையின்படி அரசு அலுவலர்கள் குடியிருப்புகள், மாவட்டத் தலைநகர் மற்றும் டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆகியவற்றில் மட்டும் கட்டப்பட்டு வருகிறது. தாலுக்கா, ஒன்றிய அளவிலே அரசு அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டித்தருவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் நல்ல யோசனையை சொல்லியிருக்கிறார். இதை நிதி நிலைக்கேற்ப யோசிக்கலாம்.

ஆத்தூர் நகரத்தில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்

18—*(வினா எண் 12873)—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரத்தில் வீட்டுவசதி வாரியத்தால் வீடுகள் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏறக்குறைய 200 குடியிருப்புகள்.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆத்தூரில் வீட்டுவசதி வாரியத்தால் 200 வீடுகள் கட்டப்படுமென்று சொன்னார்கள். அதிலே அதிக வருமானம் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள், நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள், மிகக் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள் என்று அறிய விரும்புகிறேன்.

ஆத்தூரிலேயே வீட்டுவசதி வாரிய அலுவலகம் இருந்தால்தான் விவரங்கள் ஏழை மக்களுக்குத் தெரியும். வீட்டுவசதி வாரியத்தால் விண்ணப்பம் வெளியிடப்பட்டு, அதிக வருமானம் உள்ளவர்கள் 10,000 ரூபாயும், நடுத்தர வருமானம் உள்ளவர்கள் 5,000 ரூபாயும், குறைந்த வருமானம் உள்ளவர்கள் 3,000 ரூபாயும் கட்ட வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அந்த விண்ணப்பங்களை எங்கே வாங்குவது என்று தெரியவில்லை. சேலத்திலேயே வாங்குவதா என்று தெரியவில்லை. ஆத்தூரிலேயே அலுவலகம் ஏற்படுத்தி ஏழை எளிய மக்களிடமிருந்தும் விண்ணப்பங்களைப் பெற்று, அவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டும். மேலும் எப்போது வீடுகள் கட்டப்பட்டு ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஏறக்குறைய 27.10 ஏக்கர் நிலமும், நரசிங்கபுரம் கிராமத்தில் 55·38 ஏக்கர் நிலமும் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நரசிங்கபுரம் கிராமத்தில் 148.44 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் முதல் உயர் வருமானம் பிரிவினர்வரை பயன்பெறும் பொருட்டு சுமார் 15 ஏக்கர் நிலப் பரப்பில் 237 மனைகள் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டு தற்பொழுது முடியும் தருவாயிலுள்ளது. குறைந்த வருவாயினருக்காக ரூ. 56.18 இலட்சம் மதிப்பீட்டில் 162 குடியிருப்புகளும், நடுத்தர வருவாயினருக்காக 36 குடியிருப்புகளும் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும், ஆத்தூர் புறநகர் பகுதியில் 12.24 இலட்சம் மதிப்பீட்டில் நலிந்த பிரிவினருக்காக 300 மனைகளும் குறைந்த வருவாயினருக்காக ரூ. 13.52 இலட்சம் மதிப்பீட்டில் 228 மனைகளும், ரூ. 18.33 இலட்சம் மதிப்பீட்டில் நடுத்தர வருவாயினருக்காக 149 குடியிருப்புகளும். உயர் வருவாயினருக்காக 35 மனைகளும்நில ஆர்ஜிதம் செய்து, அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மனுக்கள் பெறுவதுபற்றிச் சொன்னார்கள். அலுவலகம் இப்போது எங்கே வைத்திருக்கிறார்கள் என்பது கோப்பில் இல்லை. வீட்டு வசதி வாரியத்தோடு கலந்தாலோசித்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆரணியில் ஜரிகை தொழிற்சாலை.

19—*(வினா எண் 13974)—திரு. மு. சின்னக்குழந்தை: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியில் ஜரிகை தொழிற்சாலை அமைக்கும் பணி கால தாமதம் ஆகக் காரணம் என்ன?